# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மருத்துவம் (திருத்தச்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஏப்பிறல் மாதம் 11 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2014 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மருத்துவம் (திருத்தச்) சட்டம்*

[*2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ. 81/2006*(II)

## *(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மருத்துவ (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2.** (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 29 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- 105 ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், (ஆ) என்னும் பந்தியின் (i) என்னும் உபபந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"(i) (அ) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அல்லது நேரொத்த பல்கலைக்கழகமொன்றின் ;

(ஆ) பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் ; அல்லது

(இ) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்,

மருத்துவ மாணிப் பட்டத்தையும் மற்றும் 32 ஆம் பிரிவின்கீழ் மருத்துவப் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் வைத்திருப்பின் ; அல்லது";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உபபந்தியில் "பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் ; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக

"பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் அல்லது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்; அல்லது"; என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உபபந்தியில் "பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பட்டமளிக்கின்ற நிறுவகமொன்றின் அல்லது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு "தோட்ட அப்போதிக்கரி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" என்பது 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புக் கலைக்கழகச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப் பட்ட ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாது காப்புப் பல்கலைக்கழகம் எனப் பொருள்படும் ;".

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்